# விடியல்

## The Dawn

இதழ்-86, ஜூன்-2016



கௌரவ ஆசிரியர்

முனைவர் வே. இராதாகிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

ஆசிரியர்

முனைவர் சி. ஆர். சுரேஸ்

துறைத்தலைவர்

இணையாசிரியர்

முனைவர் ம.லோகேஸ்வரன்

ஆசிரியர் குழு

திரு. வீ. முருகானந்தம்

முனைவர் த. கண்ணன்

திருமதி. கு. சாந்தி

திரு. ப. ராஜேஷ்

முனைவர் து. சரஸ்வதி

முனைவர் பா. ராஜேஷ்

முனைவர் கோ. ரவிச்சந்திரன்

முனைவர் ந. சங்கீதா

திரு. செ. தங்கராஜ்

திரு. மு. சதீஸ்குமார்

முனைவர் கு. முப்பிடாதி

முனைவர் ப. பிரதிபா

திரு. சத்தியராஜ்

திரு.சிலம்பரசன்


## தலையங்கம்

## அழிந்து வரும் தமிழ்க்கலைகள்

மனிதன் ஆதியிலிருந்து தன்னுள் பல திறன்களை உட்செறித்து வளர்த்தெடுத்து வந்தவன். கலைகளையும் கடவுள்களையும் தாமே உருவாக்கி தாமே வழிபட்டு வணங்கி வருபவன். ஆயக்கலை அறுபத்துநான்கு என்பார்கள். அவை அத்துனையையும் நம் பண்டைத் தமிழர்கள் கரைத்துக் குடித்தவர்கள். குறிப்பாகக் கட்டிடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை ஆகியவற்றில் தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தான்.

இவையனைத்தும் தமிழரது மரபுக் கலைகள். மறுபக்கம் நாட்டுப்புறக் கலைகள் என்ற பெயரில் பழமரபுக் கலைகள் வெகுசன மக்களிடம் மாற்றுரு பெற்றுத் திகழ்கின்றன. நாட்டுப்புறக் கலைகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றவையே அக்காலத்தில் மரபுக் கலைகளாகத்


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை,**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)

**திருச்செங்கோடு—637215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.

திகழ்ந்தவை. ஆதிமனிதன் வேட்டையாடிப் பிழைப்பு நடத்திய காலத்தில் எவ்வகையான உணர்வுகளோடு அலைந்து திரிந்தானோ அத்தகைய உணர்வுகளைச் சில இனக்குழுக்களிடையேயும் சில நாட்டுப்புறக்கலைகள் வழியாகவும் காண முடியும். வேட்டைச் சமூகக் காலத்தில் மனிதன் விசிலடித்தும் ஊதியும் கத்திக்கொண்டும் திரிந்திருக்கிறான். இயற்கைகளைக் கண்டு அஞ்சி பின்னர் வழிபடத் துவங்கியிருக்கிறான். மர வழிபாடு, பேய் வழிபாடு, நடுகல் வழிபாடு என்று தனது வழிபடு தெய்வங்களையும் தானே உருவாக்கிக் கொண்டுள்ளான்.

பயிர்விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், அறுவடை செய்தல் ஆகிய காலக்கட்டங்களில் மனிதன் தனது வழிபாட்டினை விழாக்களாகக் கொண்டாடியிருக்கிறான். சாமியழைப்பு, சாமியாட்டம், கிடாவெட்டு, படைப்பு, நேத்திக்கடன் எனச் சிறுதெய்வ வழிபாடுகள் இன்றளவிலும் கிராமப்புறங்களில் வெகுசிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றன. இத்தகைய சிறுதெய்வ விழாக்களில் பல்வேறு தமிழ்க் கலைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆதலால் அவற்றை நிகழ்த்துக் கலைகள் என்றே கூறுகின்றனர்.

புலியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், நொண்டியாட்டம், பறையாட்டம், சலங்கையாட்டம், சிலம்பாட்டம் என்று ஏராளமான ஆட்டங்கள் உண்டு. இவைதவிர இசைக்கருவி மீட்டலில் தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி என்று வகைப்படுத்தி இசைத்து வந்தனர். ஆனால் இவையனைத்தும் இன்று பெயரளவிலேயே உள்ளன.

ஒன்றிரண்டு கலைகள் தமிழரின் ஆதிக் கலைகள் என்று காக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய அவல நிலை யாரால்

ஏற்பட்டது? நம்மால். ஆம் நிச்சயமாக நம்மால் தான். அரசாங்கம் சங்க இலக்கியங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறதோ அதே போல் பண்டைய கலைகளுக்கும் முக்கியத்துவம் அளித்து வளர்த்தெடுக்கும் பணியில் தீவிரமாகச் செயல்பட வேண்டும். நிகழ்த்துக்கலைஞர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கி கௌரவிக்க வேண்டும். நிகழ்த்துக்கலைகளைத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டுப்புறக் கலைகளைக் கற்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்தல் வேண்டும்.

தமிழ்நாட்டுக் கலைகள் அனைத்தையும் வெளியுலகம் அறியும் வண்ணம் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பரப்புதல் செய்ய வேண்டும். வருடந்தொறும் நிகழ்த்துக்கலைகளுக்கான போட்டிகளை அறிவித்துப் பரிசுகளை வழங்கி சிறப்புச் செய்தல் வேண்டும்.

நலிந்த நாட்டுப்புறக்கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் வேண்டும். அனைத்துத் தரப்பினரும் அனைத்துக் கலைகளையும் கற்கும் வகை செய்திடல் வேண்டும்.

you tube,Face Book, watsapp ஆகிய மென்பொருள்களின் வழி தமிழரின் கலைகளை உலகறியச் செய்ய வேண்டும். மறைந்து போன கலைகளுக்கெல்லாம் புத்துயிரூட்ட வேண்டும். இவையெல்லாம் நடக்க வேண்டுமாயின் தமிழன் தமிழர் கலைகளை அறிந்திடுதல் வேண்டும். இழிவின்றி போற்றிடல் வேண்டும்.

# உள்ளுறை

கவிதைகள்---------------------------------------------1-12

பழமொழி----------------------------------------------- 12

கமலக்கண்ணன் கவிதைகள்-------------- 14-19

பக்கோட்டி சிறுகதை---------------------------19-28

டீக்கடைக்காரன்------------------------------------ 28

எழுத்தாணி---------------------------------------- 30-32

# தாகம்

நீரின்றி உலகமில்லை
நிலமின்றி பூமியில்லை
சுட்டெரிக்கும் சூரியனிலும்
சுனாமி வருமென்று
எங்கள் கண்ணில் நீர் பெருக்கி
இப்பூமியில் பொழிய வைத்து
சந்ததியை வளர்க்கின்றோம்
சரித்திரத்தில் இந்த நாளில்
பூமி சுற்றி நீரிநந்தும்
பொய்த்துப்போன மேகம் பார்த்து
பனிமலைகள் உருகியது
பச்சை வீட்டு வாயுதன்னால்
பிள்ளை ஒன்று பெறும் போது
பிறிதொரு பிள்ளையென்று
மரக்கன்று நம் உறவாய்
மாற்றத்தைக் கொண்டு வந்தால்
மண்ணில் திரும்ப நீர் கிடைக்கும்
மனதில் இன்று உறுதி ஏற்போம்



ம.கௌதமி
இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை

# நட்புக்காலம்

நட்புக்குள் நிறங்கள் அழகே!
குறும்பும் அழகே!
நட்புக்குள் எண்ணங்கள் அழகே!

எதிர்பார்ப்பும் அழகே!
நட்புக்குள் வம்பும் அழகே!
அதைவிட அன்பும் அழகே!
நட்புக்குள் ஆணவமும் அழகே!
அப்பாவித்தனமும் அழகே!
நட்புக்குள் புன்னகையும் அழகே!
அழுகையும் அழகே!
அழகும் அசிங்கமும்
ஒன்றாய்த் தெரிவது
நட்பில் மட்டும் தான்..!
நட்பு
அது ஆயிரங்காலத்து
பொக்கிஷப் பூ



S.கண்ணன்
மூன்றாமாண்டு கணினி அறிவியல்

## அம்மா அம்மா

என் விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை ரசித்திட
வெற்றியில் களித்திட
தோல்வியில் துவண்டிட
முத்தத்தில் மகிழ்ந்திட
சித்தத்தைச் செதுக்கிட
உதிரத்தைத் துடைத்திட
உயிருடன் கலந்திட

இன்பத்தைப் பெருக்கிட
இன்னலைக் களைத்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை நீ..
அம்மா.....
உனக்கு நான் பட்ட கடனதை
எத்தனைப் பிறவி எடுத்தும்
தீர்க்க முடியாத நிலையில்
நான் மட்டும்
உறுதி கொள்கிறேன்
உன் உயிர்த்துளியாகக் கருதி
எனக்கு நீ ஆற்றியவைகளை
மறந்திடும் நாளொன்றில்
இந்த மகளுக்கு
இவ்வுலகம் வைத்திடும் பெயர்
பிணம்..!



*ப.நந்தகுமார்*
*இரண்டாமாண்டு – நுண்ணுயிரியல் துறை*

## பா.தேவி கவிதைகள்

ஆனந்தமா விதைவிதைச்சு
அழகழகா நாத்து நட்ட
விவசாயி நான்..
காலத்துக்குப் பருவமழை பெய்து
நல்ல விளைச்சலைப் பார்த்த
விவசாயி நான்..

ஏர் கலப்பையைப் பூட்டிப்
பூமியில குத்திவச்சு
கீறலிட்ட விவசாயி நான்..
பார்த்துப் பார்த்துப்
பயிர் வளர்த்தேன்
காத்துக் காத்துக்
கதிர் அறுத்தேன்
என் மக்களே
எனதருமை விவசாயம்
எங்கே போச்சு..?
எல்லாம் இயந்திரம் ஆச்சு
ஏர் கலப்பை மறைந்தது
பல்முளைத்த இயந்திரம் பிறந்தது..
சாணங்கள் மறைந்தது
பூச்சிக்கொல்லி மருந்துகள் பரவியது
பயிர்கள் குன்றியது
என் உயிரும் போகியது..



இந்த நாட்டில்
சாயக்கழிவுகளுக்கு இருக்கிறது வழி
ஆனால் விவசாயிகளுக்கு வழி..?
பெண்
பூலோகத்தில் இருக்கும்
தேவதை இவள்
குலம் தளைக்க வந்த
விருட்சம் இவள்
இரண்டாம் தாயாகக்

காக்கும் சேயும் இவள்..
சாஸ்திரம் எனும் சங்கிலியால்
வீட்டில் அடைத்தாலும்
சாதிக்க பிறந்தவள் இவள்..
நம் நாட்டின் வீரத்தை
நிலைநாட்டும் ஜான்ஸிராணிகள்..
கருணையின் வடிவாய் மாறும்
அன்னை தெரசாக்கள்..
நாட்டை ஆட்சி செய்யப் பிறந்த
இந்திரா காந்திகள்..
நம் கண்முன்னே
வாழ்ந்து மறைந்த
கண்மணிகள் இவர்கள்..
சங்க கால மகளிரிலிருந்து
இக்கால மகளிர் வரை
யாரும் சோடை போகவில்லை
என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்
என் அன்பிற்குரிய பெண்களே..!

**சிரிப்பு**


குதூகலத்தின் கூட்டாளி நீ
சந்தோசத்தின் சகோதரன் நீ
குழந்தைகளின் நண்பன் நீ
மனநிலையை மாற்றும்
மனோதத்துவ மருத்துவன் நீ
ஏழையின் முகத்தில்
கொஞ்சம் இரக்கப்படுவாய் நீ

பணக்காரர் மத்தியில்
போதும் நிறுத்திக்கொள் நீ
நண்பர்களுக்கு நீதான் கூட்டணி
விவசாயிக்கு நீதான் Botony..
பரபரப்பான வாழக்கையில்
உன்னையே நாங்கள்
விரும்புகிறோம்
ஊரார் சிரிக்க வாழ விரும்பவில்லை
பிறரைச் சிரிக்க வைத்து
வாழ விரும்புகிறேன்..
சிரிப்பே
உண்மையில் நீதான் அழகு
அழகே உன்னை ஆராதிக்கிறேன்..



**துரோகம்**

அந்நியர்கள் செய்யாதது
குழிபறிக்கும் கோழைகளின்
ஆயுதமிது..
சுயநல சந்தனையாளர்களின்
கொள்கையிது..!
ஏமாற்றுப் பேர்வழிகளின்
முடிசூடா மன்னனிது..
எட்டப்பனின் தலைவனிது..
மனிதத் தன்மையை
மறக்கடிக்கும் மிருகமிது..
அசுர குலத்தின் அரசனிது..
வஞ்சக வாடிக்கையாளனின்



வேலையிது..

சமுதாயத்தின் சங்கடத் தூணிது..

நம்பிக்கை நெஞ்சங்களைப் பிளந்து

உண்பதற்கு அலையும் நரிகளிது..

தன் இனத்தைப் புசித்துண்ணும்

காட்டேறிக் குடும்பமே இதுதான்..

மனிதா மறந்திடு

உன் துரோகத்தை

விரும்பிடு

மாற்று மார்க்கத்தை..!

**கண்ணதாசன்**

இலக்கிய வாழ்வே மூச்சாக

கவிதை நடையே பேச்சாக

வனவாசம் வாழ்ந்த கவிராசரே

உன் நூல்கள் கூறும்

உனது வாழ்க்கைச் சரிதத்தை..



உன் கவிதைகள்

திரையுலகில் மட்டுமல்ல

மக்கள் மனதில் என்றும்

பவணி வரும் பல்லக்கு..

பரமசிவன் கழுத்திலருந்து

பாம்பு கேட்டதை நானும் கேட்டேன்

அது கவிதை வரிகளல்ல

மனிதனின் ஆயுள் ரேகைகள்..

ஆசைகள் அலை போல என்றாய்

கொச்சை வார்த்தையின்றி

காதலையும் பல காரியங்களையும்

எதார்த்தமாய் சொன்னவன் நீ

பெண்களை வருணிப்பதில்

உனக்கு நிகர் நீதான்..

சாதனைகள் பல புரிந்த

உனக்கு சாகித்திய அகாதெமி விருதும்

மிகச் சாதாரணம்..

ஆம் வெள்ளித் திரையில் மட்டுமல்ல

மக்களின் உள்ளத்திரையிலும்

என்றுமே அழிக்கவியலாத சகாப்தம் நீ..

**பழமொழி** *கடந்த இதழின் தொடர்ச்சி*

101)நம்புவதற்கு முன் நண்பனையே சந்தேகப்படு

102)நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல மனிதனுக்கு ஒரு சொல்

103)நாய் வாலை நிமிர்த்த முடியாது

104)நாய் விற்ற காசு குரைக்காது

105)நிழலின் அருமை வெயிலில் தெரியும்

106)நிறைகுடம் தளும்பாது, குறைகுடம் கூத்தாடும்

107)நெருப்பின்றி புகையாது

108)நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

109)பகலில் அக்கம் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே

110)பசி வந்தால் பத்தும் பறந்து போகும்

111)பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்

112)பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்

113)பணம் பத்தும் செய்யும்

114)பதறிய காரியம் சிதறும்

115)பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்

116)பழகப் பழகப் பாலும் புளிக்கும்

117)பழிக்குப் பழி, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்

118)பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது

119)பாம்பின் கால் பாம்பறியும்

120)பார்த்தால் பசு பாய்ந்தால் புலி

121)பிஞ்சிலே பழுத்தது விரைவில் வெம்பிவிடும்


122)பிள்ளை பெறுமுன் பெயர் வைக்காதே

123)புத்திமான் பலவான்

124)புலிக்குப் பிறந்தது பூனையாகாது

125)புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

126)பூக்கடைக்கு விளம்பரம் வேண்டுமா?



127)பெண்ணிடம் இரகசியம் நில்லாது

128)பேராசை பெருநஷ்டம்

129)பொறுத்தார் பூமி ஆள்வார்

130)போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

131)போலி நண்பனை விட நேரடி எதிரி மேல்

132)மடியிலே கனமிருந்தால் வழியிலே பயமிருக்காது

133)மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு

134)மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

135)மன்னிப்போம் மறப்போம்

136)மின்னுவதெல்லாம் பொன்னல்ல

137)முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?

138)முட்டை பொறியும் முன் குஞ்சுகளை எண்ணாதே

139)முயற்சி திருவினையாக்கும்

140)முள்ளை முள்ளால் எடு

141)முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

142)மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது

143)மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி

144)யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்

145)யானைக்கும் அடி சருக்கும்

146)யானைக்கும் பானைக்கும் சரி

147)வாய்மையே வெல்லும்

148)வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்

149)யானை வரும் முன்னே மணியோசை வரும் பின்னே

150)வாளால் வாழ்பவன் வாளாலே வீழ்வான்

## கமலக்கண்ணன் கவிதைகள்

ஒதுக்கப்பட்ட வள்ளுவனிடம்
என் உரை இறுதியுரை..
தன்மானத்தைத் தொலைத்துவிட்டு
பேசித்திரியும்
வேஷதாரியாய் போனானோ தமிழன்?
என நித்தம் வெட்கிச் சாகின்றேன்
வள்ளுவா..!
தூக்கியெறிவார்
துச்சமென என்று
எண்ணித்தான் உன் பெயர்
சொல்ல மறந்தாயோ..?
கடவுளாய் நீ பிறந்தாய்
இரண்டடியில் உலகளந்தாய்..

என உள்ளமெல்லாம்

உவப்படைந்தேன்..

நீ பிறந்த தமிழ் மண்ணில் நானும் பிறந்ததற்கு..

உனை உடற்கூறு ஆய்வு செய்த

பிணமென கடத்திவிட்டு

அதற்குமொரு கதை பேசித்திரிகின்ற

காட்சி கண்டு



தமிழன் நான் அனல் தேடி விழுந்த

புழுவானேன் வள்ளுவா..!

உள்ளுவதெல்லாம்

உயர்வுள்ளல் உனக்கு ஊருமில்லை

உருவுமில்லையென்று

உருகும் போதும்

துள்ளிக் குதிக்கின்றேன்..

ஏன் தெரியுமா?

ஊர் பேர் தெரிந்திருந்தால்

உன்னுடலைத் தோண்டி எடுத்தேனும்

எரித்திருப்பார்..

பாவப்பட்ட உன் உடலை

கங்கையிலே

கரைத்திருப்பார்..

நீ தப்பித்ததில் மகிழ்ச்சி..

## <u>தோழரே</u>

தோழர் அகராதியில் தேடினால்

இன்று இது

அரசியலின் அடிசொல்..

தோழமையை மந்திரமாக்கி

பொதுவுடைமையைத் தந்திரமாக்கி

தலைவர்கள் வளர்கிறார்கள்

அதனால்தான் இன்று

பொதுவுடைமைக்கு

ஒரு கட்சி

பொதுவில் இல்லை..

பொதுவுடைமை மேடையைவிட்டு

இறங்குவதேயில்லை

ஏனெனில்

சாதிகள் இல்லையடி பாப்பா

என்ற பாரதியின்

திருமணத்தில் கூட

சாதி சத்தமில்லாமல்

சாதித்திருக்கிறது..


சிவப்புச் சிந்தனையை

மனதில் நிறுத்தாமல்

கொடியில் திருத்தும் வரை

நம் தோழர்கள் எல்லோரும்

வீணர்களே..!



**<u>அம்மா</u>**

தாய்ப் பாசத்திற்கு

எடுத்துக்காட்டாக

கங்காருவைச் சொன்னார்கள் அன்று..

குப்பை சேகரிக்கும் தொட்டியாக

கங்காருவை வைத்தார்கள் இன்று..

சுமந்ததனால்

உருவான குழந்தை

வளர்த்ததனால்

குப்பையானாலும்

அது தாயைத்தான் சாரும் என்று

உணர்ந்தவர்களே

இப்படிச் செய்திருக்கிறார்கள் போலும்..



**<u>சிலம்பு</u>**

கற்பில் சிறந்தவள்

கண்ணகியா?

மாதவியா?

கோவலன் தலை

இன்னும் உருளுகிறது..

**<u>இந்தியன்</u>**

இத்தனை நாளாய்க்

காவியைத் தலைமேல் சுமந்தாய்

காவி

துறவின் தூதுவனாயிற்றே..

எல்லாவற்றையும் துறந்தாய்..

உன் நாட்டின் வளம்

உன் புத்திசாலிப் பிள்ளைகளுக்கே

போதவில்லை..

உன்னிடம்

இழப்பதற்கு இனி
ஒன்றுமில்லை..
அதனால்தான்
அயல்நாட்டில் உன்னை
தலைகீழாய்
தொங்கவிடுகிறார்கள்
அப்போதும் நாங்கள்
சினந்தெழ மாட்டோம்
மறந்துவிட்டாயா?
நாங்கள் அகிம்சாவாதிகள்..

**பிள்ளையார் தேங்காய்**

சாலையோர பிள்ளையாருக்கு
வெள்ளி தோறும் சூறைத் தேங்காய்..
ஆம்
சூறைத் தேங்காய் சிலசமயம்
சிதறுவதற்கு முன்னாலேயே
சூறையாடப்படும்..
சத்தம் மட்டும்
பிள்ளையாருக்குப் போதும்..
தேங்காய்
சட்னிக்குத் தேவை..
கூடவே சத்தமில்லா நினைப்பும்
பிள்ளையாருக்குத் தான்
வயிறு வளர்ந்துவிட்டதே..



**<u>ஒளி</u>**

தன் உடலை உருக்கிய

தீக்குச்சிக்கு

வீரவணக்கம் செலுத்துகிறது

மெழுகுவர்த்தி..

**<u>ஸ்டிக்கர் பொட்டு</u>**



ஒற்றை நட்சத்திரம்

பகல் நிலவில்

மின்னுகிறது..

**<u>முரண்</u>**

கொக்குகளுக்காக

வெளுப்பதில்லை

நிழல்..

**<u>மணப்பெண்</u>**

குட்டிச் சுவரும்

மணப்பெண் ஆனது

நகைக்கடை விளம்பரத்தால்..

**<u>தோற்றம்</u>**

முள் மரத்தின்

நிழல்

குத்துவதில்லை..

**சிறுகதை**

**பக்கோட்டி**

“மஞ்சுவிரட்டும் மாட்டுவண்டிப்பந்தயமும் நடத்துவதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. இத்தடை அடுத்த மாதம் முதல் அமலுக்கு

வருகிறது'' என்ற செய்தியறிக்கையைக் கேட்டுவிட்டுப் பலருக்கு பதபதைப்பு ஏற்பட்டது உண்மைதான். அதில் பெரும்பாலானோர் மஞ்சுவிரட்டிற்குத் தடை என்பதை எதிர்த்துப் போராடவும் தொடங்கிவிட்டனர்.

தங்கவேலு எந்த ஊரில் தட்டுவண்டிப் பந்தயம் நடந்தாலும் நடந்தே போய்ச்சேந்துடுவான். கைக்குத் துணையா அவன் மச்சினன் முருகரத்தினமும் கூடவே திரிவான். ரெண்டு பேரும் ஒன்னு சேர்ந்து குடிக்கிறதும் ஊர்நாயம் பேசுறதும் முக்கியமான இடங்கள்ல முக்கியமான ஆள்மாதிரி காட்டிக்கிறதும் இவனுகளுக்குக் கைவந்த கலை. இவய்ங்க நடந்து போன பிறகு பின்னாடி நின்னு புரணி பேசுற ஆள்தான் நிறைய பேர். நேருக்கு நேராக யாரும் பேசுறதில்ல. பேசுனா அன்னைக்கு முழுசும் இவய்ங்க அலப்பறதான். ஊரக்கூட்டி ரெண்டாக்கிப்புடுவாய்ங்க..

அரண்மனைப்பட்டி மாகாணத்தில் தட்டுவண்டிப்பந்தயம் காலங்காலமாக நடத்தி வருகின்ற கோயில் நிகழ்ச்சி. அதிலும் அரிச்சானூர் பந்தயம் என்றால் சிறுசு பெருசு அத்தனையும் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு காலையிலேயே கெளம்பிவிடும்.

தங்கவேலும் முருகரத்தினமும் அன்னைக்குக் வெள்ளெனக் கெளம்பிட்டானுங்க. ஊர்ப்பய எவனும் "ஏம்ப்பா எங்க கெளம்பிட்டீகனு" கேக்கல. கேக்க யாரும் இன்னும் வீதிக்கு வரல என்பதுதான் உண்மை.

செங்கமங்கலான நேரம். வாயின் முன்பற்களுக்கு இடையில் பீடியை நறுக்கெனக் கடித்தபடி பேசிக்கொண்டு வந்தான் ரத்தினம். திடீரென ஆமா மாப்ள இந்த ஊர் பந்தயத்தப் பத்தி கேள்விப்பட்டுருக்கேன். அப்டி என்ன விசேசம்? இந்தக் கேள்விய கேட்டதும் தங்கம் அப்பதான் ஒரு குலுக்கு குலுக்கிவிட்டு எழுந்து நடக்கத் தொடங்கினான். அதுவரை

ரத்தினம் பேசியத கவனிக்காத தங்கத்துக்கு இந்தக் கேள்வி மட்டும் மனசுல ஒரு உற்சாகத்த ஏற்படுத்தியிருக்கணும். இப்படி ஒருத்தன் கேட்டுட்டா போதும். தன்னையும் நம்பி ஒருத்தன் கேக்குறானேங்குற மெதப்புல பொளந்து கட்டிடுவான். கிட்டத்தட்ட ஒரு வாத்தியாரு மாதிரி பேச ஆரம்பிச்சுடுவான். அவ்வளவு வரலாறும் அத்துப்புடி.

மச்சாஆஅன் கருங்காப்பட்டி சங்கரபாண்டித் தேவர் மாடு, மூப்பந்திடல் சுப்புராஜ் மாடு, மேலச்சேரி முருகையா அம்பலம் மாடு, மேட்டுக்குடி திருநாவுக்கரசு மாடு, ஒண்டிப்புலி ராக்கன் மாடு, துறையூர் ரத்தினம் மாடு, கண்டனூர் மாணிக்கஞ் செட்டியார் மாடுனு பெரிய பெரிய தலக்கட்டுக நேரடியாக் களத்துல குதிக்கிற ஊர்தான் அரிச்சானூர். சாதி, அரசியல், பணம் அத்தனையும் குவிஞ்சுகெடக்கும். அரிச்சானூர்ல மட்டும் ஒருத்தன் தட்டுவண்டி ஓட்டி ஜெயிச்சுட்டானு வை அவன்தான் அடுத்த ஒன்றியக் கவுன்சிலர். இப்டி ஒன்றியக் கவுன்சிலர வச்சுத்தான் இந்த ஜில்லாவுல தட்டுவண்டிப் பந்தயத்த நடத்திக்கிட்டு இருக்கானுக. நீ வேணுனா பாருவேன் இப்ப அரசாங்கம் விட்டுருக்க அறிக்கையப் பாத்து ஊர்ப்பயலுக அவ்வளவு பேரும் பந்தயத்த நிறுத்திடுவாய்ங்க. ஆனா அரண்மனைப்பட்டி நாட்டுக்காரனுங்க மட்டும் மாட்ட அவுத்துக்கிட்டே இருப்பானுங்க.

எத்தனப் போட்டி மாப்ள இவனுக நடத்துவாய்ங்க? பான்பராக்கு எச்சிய துப்பிக்கிட்டே ரத்தினம் கேட்டது தங்கத்துக்கு எரிச்சல உண்டாக்கிடுச்சு. தங்கத்துக்கு பான்பராக்கு மட்டும் புடிக்காது. மத்தது எல்லாம் அத்துப்புடி. மச்சானாச்சே திட்ட முடியாம பேச்ச தொடர்ந்தான் தங்கம்.

பெரிய மாடு, சின்ன மாடு, பூஞ்சிட்டு மாடுனு மூனு வகையறாவ போட்டி நடத்துவாய்ங்க. இதுல பூஞ்சிட்டுப் பந்தயம் தான் மச்சான் இங்க படுஞ்சுறுசுறுப்பா நடக்கும்.

ஆமா சோனையன் பந்தயத்துல கலந்துக்குறாப்ளயா?

என்ன மச்சான் கேள்விது? சோனையனுக்காகத்தான் பந்தயம் பாக்கவே போறேன்.

பக்கோட்டினா சோனையன். சோனையன்னா பக்கோட்டி னு சும்மாவா சொல்லித்திரியிறானுங்க.

பூஞ்சிட்டு பந்தயத்தில் சோனையன் பெயர் அடிபடாமல் இருக்காது. பக்கோட்டினா அவந்தாய்யா.. அது ரெண்டும் காலா? இல்ல தண்டவாளம் வீலா? அப்டியொரு ஆள இனிப் பாக்கமுடியுமானு ஊர் முழுக்க பேச்சு. முன்னாடிலாம் யாருடைய மாடுனு விசாரிச்சுட்டுத்தான் பந்தய ரசிகர்கள் ஒக்காந்துருப்பானுங்க. இப்போலாம் சோனையன் எந்த வண்டில ஓடுறான்னு தான் கேள்வி.

சோனையன் என்ன சாதி மச்சான்?

தெரியல மச்சான். ஆனா கண்டிக்கருப்ப கும்புடுரவங்கனு ஊருக்குள்ள பேச்சு. அத விடு. அதுவா இப்ப முக்கியம். நீ இப்ப பாக்குறியே இந்த சோனையன் மலுங்கிட்டாப்ள. ஒரு அஞ்சு வருசத்துக்கு முன்னாடி சோனையன்தான் தெக்குப் பக்கம் முழுசும் கொடிகட்டிப் பறந்தது. அடிச்சுக்க ஆளே இல்லயே. அப்படி ஒரு ஓட்டக்காரன். அட முத்து படத்துல கூட ரஜினி குதிரய அடிச்சு ஓட்டுவாருல. அவருக்குப் பின்னாடியே ஒரு வண்டில நம்ம சோனையன் மெரட்டிக்கிட்டு வருவாப்ளயாம். அந்த சீன எடுத்துப்புட்டானுகளாம்.

எதுக்காம்? தெரியல. ஒருவேள ஹீரோவ மிஞ்சி வேகமா ஓட்டிப்புட்டாரோ என்னவோ? நிஜ ஹீரோலாம் முகம் தெரியாமலே செத்துப் போயிடுறானுங்க மச்சான். அதுதானே நடக்குது இங்க.

சோனையன் அவுங்க இனத்துச் சாமியாடியாம். முன்னாடிலாம் முடிய நல்லா வளத்து முடிஞ்சு கட்டிக்கிட்டு கூட்டத்துல நடந்து வருவாப்ள பாரு. சும்மா பட்டயக் கெளப்புவாப்ள. நல்லா இறுகிப்போன ஒடம்பு, காத்தாலை விசிறி மாதிரி இருக்கும் ரெண்டு கையும். செவ்வட்டை

மாதிரி தழும்பும் காயமும் ஒடம்ப கிழிச்சுக் கெடக்கும். ஓடியோடி கனத்துப்போன தொடை. கிட்டத்தட்ட அறுத்துப்போட்ட மரம் மாதிரியிருக்கும். அவ்வளவா யார்ட்டயும் பேசமாட்டாரு. ஆனா களத்துல குதிச்சுட்டார்னு வையி துறுதுறுனுதான் இருப்பாப்ள. எனக்கென்னமோ இப்பலாம் வேகம் கொறஞ்ச மாதிரி தெரியுது.

ரத்தினத்துக்கு சோனையன பத்தி அவ்வளவு பரிச்சயம் இல்ல. தங்கம் சொன்ன பிறகு சோனையன ரசிச்சுப் பாக்கனும்னு தோணிருக்கனும்.

ரெண்டு பேரும் இப்டி பேசிக்கிட்டே பந்தயம் நடக்குற இடத்துக்கு பக்கத்துல வந்துட்டாங்க. அந்த ஒலிபெருக்கி நிமிசத்துக்கு பத்து முறை சோனையன பத்திதான் ஊதிக்கிட்டு இருந்தது.

மச்சான் அந்தா பாரு சோனையன் வர்றாப்ள.

ஆமா மச்சான். உடம்போடு உடம்பாக ஒட்டிய டவுசரையும் பனியனையும் போட்டுக்கொண்டு கையயும் காலையும் ஒதறிக்கொண்டு ஏதோ எக்ஸசைஸ் எடுத்துக்கொண்டு இருந்ததை வழியில் வந்த தங்கம் ரத்தினம் தவிர வேறு யாரும் பாத்திருக்க வாய்ப்பில்லலை.

அண்ணே! நல்லாருக்கீகளா? இன்னக்கி மெரட்டிப்புடுங்கணே! ஒங்களுக்காகத்தான் மங்கலத்துல இருந்து வந்துருக்கோம். ரத்தினம் தன்னை அறியாம கத்திட்டான்.

ம்ம்ம் னு தலைய அசைச்சு கைய ஒசத்திக் காட்டி நின்ன இடத்துலயே ஓடிக்கிட்டு இருந்தத தங்கம் ரொம்ப ரசிச்சுப் பாத்துட்டு போட்டி நடக்குற இடத்த நோக்கி இருவரும் மெதுவாக ஊர்ந்தனர்.

அடுத்ததாக பூஞ்சிட்டுப் பந்தயம் நடக்கவிருப்பதால் பொதுமக்கள் அனைவரும் ரோட்டைவிட்டு ஓரமாக நின்று ரசிக்கும்படி விழாக்கமிட்டியார் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஏம்பா அந்த மினி பஸ் காரன யாரு உள்ள விட்டது? கமிட்டியாளுக சத்த நிறுத்தி அனுப்புங்கப்பா. பந்தயம் ஆரம்பிக்க போகுது.

பூஞ்சிட்டுப் பந்தயம் பாக்கத்தான் ஊருசனம் அவ்வளவும் கூடி நிக்குது. அதுவும் பக்கோட்டி சோனையன பாக்க ரசிக பட்டாளமே இருக்கு. அதுல பாதி அறுபதுகள தாண்டுன ரசிகர்கள்.

அவ்வளவு நேர்த்தியா மாட அடுச்சு மாட்டுக்கு முன்னாடி ஓடி மாட்ட இழுத்துக்கிட்டே ஜெயிச்ச கதைலாம் சோனையனுக்கு உண்டு.

அந்தா பாருங்கப்பா சோனையன் நிக்குறான். ஆமா ஆமா மஞ்ச சட்ட தானே? னு கூட்டத்துல யாரோ கெளப்பிவிட்டாய்ங்க.

ஆனா சோனையன் வர்றதயே பெரிய ஹீரோவோட என்ட்ரி மாதிரி அனௌன்ஸ் பன்றவன் பிசிறு தட்டிப்புடுவான்.

இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒண்டிப்புலி ராக்கனோட ரெண்டு செவல காளையும் களத்துல நின்றுகொண்டிருக்கின்றன. அது மாடா இல்ல குதிரைகளா என்று தெரியாதபடி ஜைஜான்டிக்கா நிற்பதை பாருங்கள். இந்தச் செவல காளைகளோட ஓட்டுக்காரன் வந்துவிட்டார். ஆனால் தென்னாட்டுச் சிங்கம் காளைகளின் வேங்கை பக்கோட்டி சோனையன் இன்னும் வரவில்லை. இதோ வந்துவிட்டார்... என்று கூவு கூவு என்று கூவி எடுத்துவிட்டான் அந்த மைக்செட்காரன்.

கைதட்டல்களும் விசில்களும் சோனையா சோனையா என்ற கூப்பாடுகளும் ஓய்ந்தபாடில்லை..

சரி சரி எல்லாம் ஓரமா நில்லுங்கப்பா பந்தயம் ஆரம்பிக்கப்போகுது.. மைக்செட்

ஏழு வண்டிகள். நேராக ரோட்டில் நிறுத்த முடியாததால் ஒன்றன்பின் ஒன்றாக வண்டிகள் நிற்கின்றன. ஒவ்வொரு வண்டியாக மைக்செட்காரன் அனௌன்ஸ் பன்றான்.

முதலாவதாக மேட்டுக்குடி திருநாவுக்கரசு மாடு,

இரண்டாவதாக கருங்காப்பட்டி சங்கரபாண்டித் தேவர் மாடு
மூன்றாவதாக மேலச்சேரி முருகையா அம்பலம் மாடு
நான்காவதாக கண்டனூர் மாணிக்கஞ் செட்டியார் மாடு
ஐந்தாவதாக ஒண்டிப்புலி ராக்கன் மாடு
ஆறாவதாக மூப்பந்திடல் சுப்புராஜ் மாடு

இந்த மாடுகளுக்குப் பின்னாலும் வண்டிகளை ஓட்டுகிறவர்களுக்குப் பின்னாலும் பக்கோட்டிகளுக்குப் பின்னாலும் வெவ்வேறு பின்புலங்கள் இருப்பதெல்லாம் வேறு கதை.

ஏம்ப்பா ஒதுங்குப்பா. காளைகள் எல்லாம் சீறிப் பாஞ்சுக்கிட்டு இருக்கு. கொழந்தைகள குறுக்க வுட்டுறாதீங்க கவனம் கவனம் னு மைக்செட் முன்னாடி போய்க்கொண்டிருக்க.



அரியானூர் விலக்கிலிருந்து கீரணிப்பட்டி வளைவு வரை சென்று கொடியை வாங்கிக்கொண்டு தொடக்க எல்லைக்கு திரும்ப வேண்டும். முதலில் வரும் வண்டிக்குப் பாராட்டும் பரிசும் வழங்கப்படும். கிட்டத்தட்ட ஒரு இலட்சம் இருக்கும்.

அதோ விசில் ஊதப்பட்டுவிட்டது. காளைகள் சீறிப்பாய்கின்றன. ரசிகர் பட்டாளம் கூச்சலிடுகின்றனர். போதாக்குறைக்கு மைக்செட்.

ஏழு மாடுகளுக்கு முன்பக்கமாக விழாக்கமிட்டியார் பைக்குகளில் பறக்கின்றனர். பின்புறமாக ரசிகர் பட்டாளம் எப்படியும் இருபத்தஞ்சு முப்பது பைக்குகளில் உறுமிக்கொண்டு செல்கின்றனர்...

ஏய் அந்தா பாரு சோனையன். சோனையா வெரட்டி ஓட்டு வெரட்டி ஓட்டுனு ஒரே இரைச்சல். ஆனால் சோனையன் யாரையும் கண்டுகொள்ளவில்லை. வெற்றிலையைப் போட்டுத் துப்பிய வாயுடன் ஹேய் ஹேய் னு வண்டிய விட்டு இறங்காம தட்டிக்கிட்டு இருக்கான். மற்ற வண்டிகளோட பக்கோட்டிகள் எல்லாம் வண்டிய விட்டு இறங்கி லீடிங் கொடுக்க ஆரம்பிச்சாட்டானுங்க. ஆனா சோனையன் அசால்ட்டா

வண்டிலயே வண்டிக்காரனோடு ஒக்காந்துட்டு இருந்தத எல்லாரும் வெறுப்போடு பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க..

யோவ் அவன் ஸ்டைலே அதுதான்யா போகும் போது விட்டுடுவான். வரும் போது பாருனு தங்கம் பொங்கி எழுந்துட்டான்..

எல்லையில் ஐந்தாறு மண்ணெண்ணெய் ட்ரம் நிறுத்தப்பட்டிருக்கும். அந்த ட்ரம்களிடம் மாடுகளை வளைத்துக் கொடியையும் வாங்கிக்கொண்டு பிறகு ஓட்ட வேண்டும். அந்த இடம் தான் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கின்ற இடம். கொடியை வாங்குகின்ற இடத்தில்தான் சோனையன் சாகசங்களைக் காட்டி காளைகளை இறங்கி தட்டுவான்.

ஐந்தாவது இடத்தில் போய்க்கொண்டிருந்த ஒண்டிப்புலி ராக்கனோட மாடு இரண்டாம் இடத்தில் வந்து கொண்டிருக்கிறது. முதலாவதாக போய்க்கொண்டிருந்த மேட்டுக்குடி திருநாவுக்கரசு மாடு நான்காவது இடத்தில் வந்து கொண்டிருக்கிறது. ஆறாவது இடத்தில் போய்க்கொண்டிருந்த மூப்பந்திடல் சுப்புராஜ் மாடு இப்போது முதல் இடத்தில் வந்து கொண்டிருக்கிறது. மற்ற மாடுகளைப் பற்றி மைக்செட் சொல்லவில்லை. அவைகள் தூரத்தில் வந்து கொண்டிருக்கலாம். அல்லது ரோட்டை விட்டுக் கீழே விழுந்திருக்கலாம். அல்லது பக்கோட்டி மாடுகளின் தொடைகளில் தார்க்குச்சியால் குத்தியதில் ரத்தம் பீறிட்டுக் கொப்பளித்து மயங்கியிருக்கலாம்.

மூன்று மாடுகளும் வாயில் நுரை தள்ளிக்கொண்டு கண்கள் இரண்டும் பிதுங்கியபடி ஓடிக்கொண்டிருக்கின்றன.

இன்னும் இரண்டாவது இடத்திலேயே சோனையன் ஓட்டிக்கொண்டிருப்பதை ரசிகர்கள் விரும்பவில்லை. சோனையா வெரசா ஓட்டு ம்ம்ம் இன்னும் வெரசா..

சோனையன் தன் பிடரியில் கால் அடிக்கிற மாதிரி பிசாசுத்தனமாக மாட்டை விரட்டினான்.

ஹேய் ஹேய்... ம்ம்ம்... உச்உச்உச்...

இரண்டில் ஒரு செவலக்காளைக்கு என்ன ஆனதென்று யாராலும் ஊகிக்க முடியல. திடீரென வெள்ளை முழி தெரியும் அளவுக்கு நான்கு கால்களும் பின்னிக்கொள்ள நிதானம் தவறிப் போனது. இன்னொரு மாடும் தன் நிலை மாறிப்போனது. வண்டியும் குடம்சாய்ந்து போக வண்டி ரொட்டைவிட்டுச் சரிந்து மாட்டின் தோல்கள் உராய்ந்து ரத்தம் சொட்ட சொட்ட பெரிய குழிக்குள் நொருங்கி விழுந்தன.மாடுகள் இரண்டும் குத்துயிராகக் கிடக்க வண்டிக்காரனின் இடது கை முறிந்து கால் விரல்கள் துண்டித்துப் போக இழுத்துக் கொண்டு கிடந்தான்..

சோனையன் மட்டும் ரோட்டின் மேலேயே நின்று கொண்டிருக்கிறான்..

அவன் பார்வைகள் துடித்துக்கொண்டிருக்கிற செவலயைவிட்டு மீளவில்லை.

சோனையா மாட்ட தூக்கி ஓட்டு.. ம்ம்ம் ஒன்னால முடியும்னு யாரோ ஒருவன் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தான்..

தங்கமும் ரத்தினமும் உக்காந்திருந்த இடத்துல இந்தச் சம்பவம் நடந்தத அவங்க எதிர்பார்க்கல.

வண்டிய விட்டு இறங்கி ஓட்டியதுல சோனையன் மட்டும் ஓடியபடியே நின்னுட்டான்..

அதோ அந்த மாடு கடைசியாக ஒருமுறை சோனையனைப் பார்த்துக் கொள்கிறது. இன்னொரு மாடும் சோனையனைப் பார்க்க தன் கழுத்தைத் திருப்புகிறது..

சோனையன் ஏனோ எங்கேயும் திரும்பாமல் தனக்குப் புகழைத் தேடித் தந்த அந்த செவலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

தூரத்தில் மைக்செட் மூப்பந்திடல் சுப்புராஜ் மாடு முதல் பரிசினைத் தட்டிச் சென்றுள்ளது. அதற்கு மேல் யாரும் அந்த மைக்செட்டை கேக்க விரும்பவில்லை..

அந்தத் தனிமரம் கண்ணீரைச் சிந்தியபடி செவலைகளைத் தன் மடியில் வைத்துக் கொள்கிறது.. *அகரன்-தமிழ்த்துறை*

## டீக்கடைக்காரன்

விடிவு எப்போது?
விடியலுக்கு முன்
விடிவெள்ளி வந்து நிற்க
விடலை சேவலை
விரைந்து இவனெழுப்பி
விடியாத பின்னிரவில்
விடைதேடி கடை திறக்கிறான்
டீக்கடைக்காரன்..
வாடிக்கையாளர்களுக்கு
வடையும் டீயோடு
வானொலி செய்தியும்
இவன்தரும் அன்பளிப்புகள்..
இலங்கைத் தமிழர்
இந்திய இராணுவம்
நாட்டில் கலவரம்
கிரிக்கெட் நிலவரம்
புயலின் சீற்றம்
பொருளாதார ஏற்றம்
சூடான விவாதங்களை

அவனே சுடச்சுட டீயுடன்

அரங்கேற்றுகிறான்..

ஆனால்

அரசியல் பேசாதீர் என்று

அறிவிப்புப் பலகையையும்

தொங்கவிட்டிருக்கிறான்..

சட்டைப் பையில்

காசில்லாப் பேர்வழிகளுக்கு

சுவரில் கரித்துண்டால்

கணக்கெழுதுகிறான்

கள்ளாவைப் பார்த்தபடி..

அசலின்றி கடைவைத்து

நிதி நிலைமையைப் பெருக்கிடவே

நினைத்திருந்தான்

நெடுநாளாய்..



எச்சில் குவளைகளை

அலசிடும் கைகளில்

எஞ்சி நிற்பதில்லை

கஞ்சிக்கான காசு கூட..

உயர்த்தி ஆத்தும்

டீத்தண்ண ஆத்தலில்

நொடியில்  உருவாகி மறையும்

பழுப்பு நிற பாதைகளில்

இவனது வாழ்வு..

சுடச்சுட டீயில்

சுருள் சுருளாய் போகும் ஆவியில்

நீராவியானது

இவனது தலையெழுத்தும் தான்..

இவனது டீ வடியில்

கசடாவது தங்கும்

ஆனால் இவனது

கள்ளாப் பெட்டியில்

செல்லா அக்கவுண்ட்

நோட்டுகளே தங்கும்..

பட்டங்கள் வாங்கிடாத

பத்மபூஷன்கள்

சட்டங்களைத் தீட்டுகிறார்கள்..

டீக்கடைச் சுவர்களில்

கடன் அன்பை முறிக்கும் என்று..

*நா.சரண்யா*

*தமிழ் – இரண்டாமாண்டு*

***எழுத்தாணி – 5***

ஒருநாள் பொழுதில் கபிலரும் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனும் அருகருகே அமர்ந்திருந்தனர். அப்பொழுது மன்னன் கபிலரின் கையைப் பற்றிக்கொண்டு "புலவரே உமது கை மிகவும் மென்மையாக உள்ளதே" என்று ஆச்சரியத்துடன் வினவினான். அதுகேட்ட கபிலருக்குச் சொல்லவா வேண்டும் உதித்துவிட்டது பாடல்.

**புதுக்கவிதை வடிவம்**

கணைய மரங்களின்
காலுறிக்கும் வலிமை
முதல் வேலையே
எதிர்ப்போரை உதிர்த்தல்தான்

இப்படிக் கடுங்கோபம் கொண்ட
சிறுகண்ணுடைய யானையை
வேலைப்பாடு பொருந்திய
அங்குசம் கொண்டு
அதன் அருகில் சென்று
மதத்தை அடக்கி வீரத்தைக்
காட்டி நிற்கின்ற கைகள் அது..
பாதாளக் கிணற்றைக்
கவனமாய்க் கடப்பதற்கு
குதிரையின் பிடிவாரை
சுண்டி இழுக்கின்ற கைகள் அது..
நயமிக்க தேரில்
நின்றுகொண்டு எதிரிகளை
அன்பால் முடியாது என்று
அம்பால் வீழ்த்த
வில்லினை இழுத்து விடுகின்ற கைகள் அது..



இத்தனை வேலைகளைச் செய்யும்
உன் கைகள்
பஞ்சுபோல் இருக்க வாய்ப்பில்லை
அதுதான் இறுகிப்போய் உள்ளன..
நாங்கள் அவ்வாறில்லை..
காய்களையும் கறிகளையும் உண்டு
உடல் வருத்தி
வேலை செய்யும் பழக்கமில்லை
உன்னைப் பாடுவதைத் தவிர
வேறு ஒன்றும் அறியோம்..
ஆதலால்தான் எங்கள் கைகள்
மெலிந்தனவாய் உள்ளன..

**செய்யுள்**

கடுங்கண்ண கொல்களிற்றால்
காப்புடைய எழுமுருக்கிப்
பொன்னியல் புனைதோட்டியான்
முன்பு துரந்து சமம் தாங்கவும்
பாருடைத்த குண்டகழி

நீரழுவ நிவப்புக் குறித்து
நிமிர் பரிய மா தாங்கவும்
ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில்
வலிய வாகுநின் தாள் தோய் தடக்கை
புலவு நாற்றத்து பைந்தடி
பூ நாற்றத்த புகைகொளீஇ ஊன் துவை
கறி சோறுண்டு வருந்து தொழிலல்லது
பிறிது தொழில் அறியா ஆகலின் அன்றும்
கார் அணங்காகிய மார்பில் பொருநர்க்கு
இருநிலத்து அன்ன நோன்மைச்
செருமிகு சேஎய் நின் பாடுநர் கையே (புறம் .14)

திணை – பாடாண் திணை
துறை – இயன்மொழித்துறை

**உரைவடிவம்**

காவலுக்கான கணைய மரத்தை முறித்து கொலைத்தொழிலை விரும்பிச் செய்யும் வலிமை பொருந்திய யானையை அழகுடைய இரும்பால் செய்யப்பட்ட அங்குசம் கொண்டு அடக்குபவன் நீ. பிளந்து கிடந்த கிடங்கு ஒன்றில் ஆழமான நிலையில் நீர் நிரம்பிக் கிடக்க அதனுள் செல்லாமல் தாண்டிக் கடத்தற் பொருட்டு குதிரையின் கயிற்றை இழுத்துப் பிடிக்கும் கைகள் உன் கைகள் அம்பறாத்தூணி பொருந்திய தேரினுள் வடு பொருந்தும்படி வில்லினை ஏவுதற்குரிய வலிய கைகள் பரிசு பெறுபவர்களுக்கு ஆபரணங்களை வாரி வழங்குதற்குரிய கைகள் ஆதலால் நின் கைகள் வலியனவாக உள்ளன. புலால் நாற்றமுடைய புதிய ஊனைச் சமைத்து உண்ணுதலையும் உடலினை வருத்தி வேறு தொழில் ஏதும் செய்யாததாலும் பாடுதல் தொழிலையுடைய எமது கைகள் மென்மையாக உள்ளன.

**அருஞ்சொற்பொருள்**

எழு – கணைய மரம், சமம் – வேண்டும் அளவு, குசை – சாட்டி, பிடிவார், புறம் – முதுகு, சாபம் – வில், செவ்விதததடி-புதிய ஊன் கறி